# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

## மதிப்பீட்டு அறிக்கை

# 14 - கத்தோலிக்கத் திருமறை

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

# மதிப்பீட்டு அறிக்கை

# 14 - கத்தோலிக்கத் திருமறை

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**கத்தோலிக்கத் திருமறை**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# அறிமுகம்

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளில் அதிக அளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்கே தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடைபெறும் இப்பரீட்சைப் பெறுபேறுகளினால் பெறப்படும் சான்றிதழ் உயர்கல்விக்கான தகுதியைப் பெறுவதற்கு மட்டுமன்றி நடுத்தர மட்டத்தில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்கலைக்கழகங்களின் சில கற்கைநெறிகளைப் பயிலுவதற்கான அடிப்படைத் தகைமையை அளவிடும் அளவுகோலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்பகம், தகுதி ஆகியவற்றுடன் உயர்தரமும் காரணங்களாகும்.

இப்பரீட்சையில் உயர் அடைவினைப் பெறுவதற்காக மாணவர்களும், அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிக முயற்சியை மேற்கொள்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் அதற்கு உதவும் முகமாகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்கான கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் பயனுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை நூலகத்தில் பேணுதல் மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I இல், வினாப்பத்திரம் ரீதியாக பாட இலக்குகள், பாட அடைவு பற்றிய தகவல்கள், மாவட்டம், கல்வி வலயம் என்பவற்றிற்கேற்பத் தரப்பட்டுள்ளன. பகுதி II இல், முதலாம் இரண்டாம் வினாப்பத்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் விடைகள் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் வழிகாட்டல்களும் அடங்கியுள்ளன. பகுதி III இல் விடை எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களும் கற்றல் - கற்பித்தல் பணி பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகளும் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய முறைகள் பற்றியும் உங்களுக்கு துணைபுரியக் கூடிய அம்சங்களும் தரப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பண்புத்தர விருத்திக்காகப் பயனுள்ள கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரதான பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்களுக்கும் இச்செயற்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2012 ஜனவரி 20
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. டப்ளியு.எம்.என்.ஜே. புஸ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திருமதி. மை.ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | திரு. எல்.ஜீ. எஸ். சமரகோன்<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | செல்வி. டீ. ஐ. ஜோசப்<br>ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>கொழும்பு. |
| | - | திருமதி. எச். மியுரியல் பெர்னான்டோ<br>மேல்/ நீர்/ பெசிலிகா<br>ராகம. |
| | - | திருமதி. ஐ. ஈ. பீ. பெர்னான்டோ<br>வ.மேல்/ சிலர்/ வென்/ கோணவில புனித ஜோசப் வி.<br>தங்கொட்டுவ. |
| கணனி பக்க வடிவமைப்பு | - | திரு. பொ.அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர் |
| | | செல்வி. றஹீனா ஹாசிம்<br>கணனி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளித்தமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 11

2.1.2 வினாப்பத்திரம் I 12

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 16

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 17

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 18

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 19

**பகுதி** III

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 28

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 29

# பகுதி I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ✶ படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதன் தன்னைப் படைத்தவரை அறிந்து கொள்ளத் திட்டமிடல்
- ✶ கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவனாக வாழ்வதற்குத் திட்டமிடல்
- ✶ இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர திட்டமிடல்
- ✶ அடிப்படைக் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பும் இறைக்கட்டளைகளினதும், மலைப்பொழிவினதும் அடிப்படையில் மறையைக் கற்பித்தலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளச்செய்தல்
- ✶ செபத்தின் வல்லமையால் ஆற்றல் பெற்று சமூகத்தை ஒளிரச் செய்யும் ஒளியாகச் செயலாற்றுவதற்கு வழிகாட்டல்.
- ✶ கிறிஸ்துவின் அளவில்லா அன்பினால் நிறைவடைந்து அவ்வன்பை சமூகத்திலே பரப்பும்படியாக திட்டமிடல்.
- ✶ தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடையாகையால் அதனைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான ஆற்றலை விருத்தி செய்தல்.
- ✶ ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்து மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவதோடு கிறிஸ்தவன் என்ற உறுதியான அடையாளத்தோடு, உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் பங்காளிகளாக்குதல்.
- ✶ கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்கும் அதேவேளை ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழக்குவித்தல்.
- ✶ இலங்கைப் பிரஜை என்ற வகையில் நாட்டின் மீது பற்றையும், மரியாதையையும் உருவாக்குதல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 13876 | 262 | 14138 |
| தமிழ் | 5781 | 551 | 6332 |
| ஆங்கிலம் | 48 | 122 | 170 |
| **மொத்தம்** | **19705** | **935** | **20640** |

**அட்டவணை 1**

### 1.2.2 தரங்கள் பெறப்பட்ட விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 8991 | 45.63 | 144 | 15.40 | 9135 | 44.26 |
| B | 3172 | 16.10 | 194 | 20.75 | 3366 | 16.31 |
| C | 3843 | 19.50 | 308 | 32.94 | 4151 | 20.11 |
| S | 2608 | 13.24 | 218 | 23.32 | 2826 | 13.69 |
| W | 1091 | 5.53 | 71 | 7.59 | 1162 | 5.63 |
| **மொத்தம்** | **19704** | **100.00** | **935** | **100.00** | **20640** | **100.00** |

**அட்டவணை 2**

### 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3126 | 1811 | 57.93 | 416 | 13.31 | 483 | 15.45 | 265 | 8.48 | 2975 | 95.17 | 151 | 4.83 |
| 2. கம்பஹா | 5503 | 2652 | 48.19 | 754 | 13.70 | 1000 | 18.17 | 730 | 13.27 | 5136 | 93.33 | 367 | 6.67 |
| 3. களுத்துறை | 498 | 270 | 54.22 | 63 | 12.65 | 78 | 15.66 | 52 | 10.44 | 463 | 92.97 | 35 | 7.03 |
| 4. கண்டி | 339 | 174 | 51.33 | 43 | 12.68 | 58 | 17.11 | 51 | 15.04 | 326 | 96.17 | 13 | 3.83 |
| 5. மாத்தளை | 118 | 59 | 50.00 | 14 | 11.86 | 26 | 22.03 | 17 | 14.41 | 116 | 98.31 | 2 | 1.69 |
| 6. நுவரெலியா | 519 | 89 | 17.15 | 91 | 17.53 | 158 | 30.44 | 129 | 24.86 | 467 | 89.98 | 52 | 10.02 |
| 7. காலி | 61 | 35 | 57.38 | 12 | 19.67 | 8 | 13.11 | 6 | 9.84 | 61 | 100.00 | 0 | 0.00 |
| 8. மாத்தறை | 40 | 10 | 25.00 | 5 | 12.50 | 15 | 37.50 | 10 | 25.00 | 40 | 100.00 | 0 | 0.00 |
| 9. அம்பாந்தோட்டை | 3 | 1 | 33.33 | 0 | 0.00 | 1 | 33.33 | 1 | 33.33 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 10. யாழ்ப்பாணம் | 1173 | 486 | 41.43 | 214 | 18.24 | 246 | 20.97 | 160 | 13.64 | 1106 | 94.29 | 67 | 5.71 |
| 11. கிளிநொச்சி | 242 | 51 | 21.07 | 48 | 19.83 | 61 | 25.21 | 49 | 20.25 | 209 | 86.36 | 33 | 13.64 |
| 12. மன்னார் | 814 | 410 | 50.37 | 160 | 19.66 | 152 | 18.67 | 79 | 9.71 | 801 | 98.40 | 13 | 1.60 |
| 13. வவுனியா | 328 | 158 | 48.17 | 66 | 20.12 | 65 | 19.82 | 29 | 8.84 | 318 | 96.95 | 10 | 3.05 |
| 14. முல்லைத்தீவு | 216 | 70 | 32.41 | 25 | 11.57 | 48 | 22.22 | 46 | 21.30 | 189 | 87.50 | 27 | 12.50 |
| 15. மட்டக்களப்பு | 320 | 135 | 42.19 | 47 | 14.69 | 59 | 18.44 | 45 | 14.06 | 286 | 89.38 | 34 | 10.63 |
| 16. அம்பாறை | 106 | 43 | 40.57 | 21 | 19.81 | 26 | 24.53 | 9 | 8.49 | 99 | 93.40 | 7 | 6.60 |
| 17. திருகோணமலை | 206 | 89 | 43.20 | 33 | 16.02 | 48 | 23.30 | 21 | 10.19 | 191 | 92.72 | 15 | 7.28 |
| 18. குருநாகல் | 583 | 289 | 49.57 | 103 | 17.67 | 94 | 16.12 | 73 | 12.52 | 559 | 95.88 | 24 | 4.12 |
| 19. புத்தளம் | 3147 | 1510 | 47.98 | 533 | 16.94 | 532 | 16.90 | 421 | 13.38 | 2996 | 95.20 | 151 | 4.80 |
| 20. அனுராதபுரம் | 92 | 41 | 44.57 | 17 | 18.48 | 20 | 21.74 | 9 | 9.78 | 87 | 94.57 | 5 | 5.43 |
| 21. பொலன்னறுவை | 37 | 25 | 67.57 | 2 | 5.41 | 4 | 10.81 | 3 | 8.11 | 34 | 91.89 | 3 | 8.11 |
| 22. பதுளை | 193 | 66 | 34.20 | 29 | 15.03 | 51 | 26.42 | 32 | 16.58 | 178 | 92.23 | 15 | 7.77 |
| 23. மொனராகலை | 14 | 5 | 35.71 | 2 | 14.29 | 1 | 7.14 | 5 | 35.71 | 13 | 92.86 | 1 | 7.14 |
| 24. இரத்தினபுரி | 114 | 42 | 36.84 | 24 | 21.05 | 25 | 21.93 | 18 | 15.79 | 109 | 95.61 | 5 | 4.39 |
| 25. கேகாலை | 100 | 43 | 43.00 | 13 | 13.00 | 16 | 16.00 | 18 | 18.00 | 90 | 90.00 | 10 | 10.00 |
| **மொத்தம்** | **17892** | **8564** | **47.86** | **2735** | **15.29** | **3275** | **18.30** | **2278** | **12.73** | **16852** | **94.19** | **1040** | **5.81** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2220 | 1319 | 59.41 | 303 | 13.65 | 340 | 15.32 | 160 | 7.21 | 2122 | 95.59 | 98 | 4.41 |
| 2. ஹோமாகம | 99 | 43 | 43.43 | 12 | 12.12 | 17 | 17.17 | 17 | 17.17 | 89 | 89.90 | 10 | 10.10 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 146 | 53 | 36.30 | 27 | 18.49 | 27 | 18.49 | 31 | 21.23 | 138 | 94.52 | 8 | 5.48 |
| 4. பிலியந்தல | 661 | 396 | 59.91 | 74 | 11.20 | 99 | 14.98 | 57 | 8.62 | 626 | 94.70 | 35 | 5.30 |
| 5. கம்பஹா | 394 | 247 | 62.69 | 45 | 11.42 | 48 | 12.18 | 39 | 9.90 | 379 | 96.19 | 15 | 3.81 |
| 6 மினுவாங்கொட | 251 | 85 | 33.86 | 40 | 15.94 | 49 | 19.52 | 51 | 20.32 | 225 | 89.64 | 26 | 10.36 |
| 7. நீர்கொழும்பு | 3945 | 1936 | 49.07 | 549 | 13.92 | 717 | 18.17 | 507 | 12.85 | 3709 | 94.02 | 236 | 5.98 |
| 8. களனி | 913 | 384 | 42.06 | 120 | 13.14 | 186 | 20.37 | 133 | 14.57 | 823 | 90.14 | 90 | 9.86 |
| 9. களுத்துறை | 475 | 264 | 55.58 | 58 | 12.21 | 73 | 15.37 | 49 | 10.32 | 444 | 93.47 | 31 | 6.53 |
| 10. மத்துகம | 14 | 4 | 28.57 | 2 | 14.29 | 4 | 28.57 | 1 | 7.14 | 11 | 78.57 | 3 | 21.43 |
| 11. ஹொரணை | 9 | 2 | 22.22 | 3 | 33.33 | 1 | 11.11 | 2 | 22.22 | 8 | 88.89 | 1 | 11.11 |
| 12. கண்டி | 230 | 142 | 61.74 | 30 | 13.04 | 32 | 13.91 | 20 | 8.70 | 224 | 97.39 | 6 | 2.61 |
| 13. தெனுவர | 6 | 2 | 33.33 | 0 | 0.00 | 1 | 16.67 | 3 | 50.00 | 6 | 100.00 | 0 | 0.00 |
| 14. கம்பளை | 59 | 22 | 37.29 | 7 | 11.86 | 13 | 22.03 | 13 | 22.03 | 55 | 93.22 | 4 | 6.78 |
| 15. தெல்தெனியா | 13 | 1 | 7.69 | 3 | 23.08 | 5 | 38.46 | 3 | 23.08 | 12 | 92.31 | 1 | 7.69 |
| 16. வத்தேகம | 28 | 7 | 25.00 | 3 | 10.71 | 6 | 21.43 | 10 | 35.71 | 26 | 92.86 | 2 | 7.14 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 33.33 | 2 | 66.67 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 18. மாத்தளை | 67 | 31 | 46.27 | 10 | 14.93 | 11 | 16.42 | 14 | 20.90 | 66 | 98.51 | 1 | 1.49 |
| 19. கலேவெவ | 50 | 28 | 56.00 | 4 | 8.00 | 14 | 28.00 | 3 | 6.00 | 49 | 98.00 | 1 | 2.00 |
| 20. நாஉல | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 21. வில்கமுவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 22. நுவரெலியா | 245 | 44 | 17.96 | 48 | 19.59 | 75 | 30.61 | 56 | 22.86 | 223 | 91.02 | 22 | 8.98 |
| 23. கொத்மலை | 28 | 4 | 14.29 | 6 | 21.43 | 9 | 32.14 | 7 | 25.00 | 26 | 92.86 | 2 | 7.14 |
| 24. ஹட்டன் | 207 | 34 | 16.43 | 31 | 14.98 | 60 | 28.99 | 56 | 27.05 | 181 | 87.44 | 26 | 12.56 |
| 25. வலப்பனை | 36 | 7 | 19.44 | 6 | 16.67 | 12 | 33.33 | 9 | 25.00 | 34 | 94.44 | 2 | 5.56 |
| 26. ஹங்குரன்கெத்த | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 27. காலி | 45 | 30 | 66.67 | 9 | 20.00 | 5 | 11.11 | 1 | 2.22 | 45 | 100.00 | 0 | 0.00 |
| 28. எல்பிட்டிய | 7 | 2 | 28.57 | 2 | 28.57 | 1 | 14.29 | 2 | 28.57 | 7 | 100.00 | 0 | 0.00 |
| 29. அம்பலாங்கொடை | 2 | 1 | 50.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 0 | 0.00 | 2 | 100.00 | 0 | 0.00 |
| 30. உடுகம | 7 | 2 | 28.57 | 1 | 14.29 | 1 | 14.29 | 3 | 42.86 | 7 | 100.00 | 0 | 0.00 |
| 31. மாத்தறை | 14 | 7 | 50.00 | 2 | 14.29 | 3 | 21.43 | 2 | 14.29 | 14 | 100.00 | 0 | 0.00 |
| 32. அக்குரஸ்ஸ | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 33. முலடியன-ஹக்மன | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 34. மொறவக்க | 25 | 3 | 12.00 | 3 | 12.00 | 12 | 48.00 | 7 | 28.00 | 25 | 100.00 | 0 | 0.00 |
| 35. தங்காலை | 1 | 1 | 100.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 | 2 | 100.00 | 0 | 0.00 |
| 37. வலஸ்முல்லை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 38. யாழ்ப்பாணம் | 573 | 280 | 48.87 | 97 | 16.93 | 105 | 18.32 | 68 | 11.87 | 550 | 95.99 | 23 | 4.01 |
| 39. தீவகம் | 161 | 48 | 29.81 | 40 | 24.84 | 48 | 29.81 | 20 | 12.42 | 156 | 96.89 | 5 | 3.11 |
| 40. தென்மராட்சி | 34 | 7 | 20.59 | 4 | 11.76 | 9 | 26.47 | 6 | 17.65 | 26 | 76.47 | 8 | 23.53 |
| 41. வலிகாமம் | 253 | 99 | 39.13 | 46 | 18.18 | 53 | 20.95 | 43 | 17.00 | 241 | 95.26 | 12 | 4.74 |
| 42. வடமராட்சி | 152 | 52 | 34.21 | 27 | 17.76 | 31 | 20.39 | 23 | 15.13 | 133 | 87.50 | 19 | 12.50 |
| 43. கிளிநொச்சி | 242 | 51 | 21.07 | 48 | 19.83 | 61 | 25.21 | 49 | 20.25 | 209 | 86.36 | 33 | 13.64 |
| 44. மன்னார் | 677 | 382 | 56.43 | 130 | 19.20 | 120 | 17.73 | 42 | 6.20 | 674 | 99.56 | 3 | 0.44 |
| 45. மடு | 137 | 28 | 20.44 | 30 | 21.90 | 32 | 23.36 | 37 | 27.01 | 127 | 92.70 | 10 | 7.30 |
| 46. வவுனியா - தெற்கு | 281 | 149 | 53.02 | 59 | 21.00 | 45 | 16.01 | 24 | 8.54 | 277 | 98.58 | 4 | 1.42 |
| 47. வவுனியா - வடக்கு | 47 | 9 | 19.15 | 7 | 14.89 | 20 | 42.55 | 5 | 10.64 | 41 | 87.23 | 6 | 12.77 |
| 48. முல்லைத்தீவு | 184 | 65 | 35.33 | 22 | 11.96 | 37 | 20.11 | 35 | 19.02 | 159 | 86.41 | 25 | 13.59 |
| 49. துணுக்காய் | 32 | 5 | 15.63 | 3 | 9.38 | 11 | 34.38 | 11 | 34.38 | 30 | 93.75 | 2 | 6.25 |
| 50. மட்டக்களப்பு | 283 | 126 | 44.52 | 43 | 15.19 | 50 | 17.67 | 38 | 13.43 | 257 | 90.81 | 26 | 9.19 |
| 51. கல்குடா | 23 | 1 | 4.35 | 3 | 13.04 | 8 | 34.78 | 4 | 17.39 | 16 | 69.57 | 7 | 30.43 |
| 52. பட்டிருப்பு | 14 | 8 | 57.14 | 1 | 7.14 | 1 | 7.14 | 3 | 21.43 | 13 | 92.86 | 1 | 7.14 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 54. அம்பாறை | 18 | 5 | 27.78 | 3 | 16.67 | 2 | 11.11 | 5 | 27.78 | 15 | 83.33 | 3 | 16.67 |
| 55. கல்முனை | 34 | 21 | 61.76 | 5 | 14.71 | 5 | 14.71 | 1 | 2.94 | 32 | 94.12 | 2 | 5.88 |
| 56. சம்மாந்துறை | 36 | 11 | 30.56 | 9 | 25.00 | 11 | 30.56 | 3 | 8.33 | 34 | 94.44 | 2 | 5.56 |
| 57. மஹாஓய | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 58. தெஹியத்தகண்டிய | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 59. அக்கரைப்பற்று | 16 | 6 | 37.50 | 4 | 25.00 | 6 | 37.50 | 0 | 0.00 | 16 | 100.00 | 0 | 0.00 |
| 60. திருகோணமலை | 163 | 74 | 45.40 | 27 | 16.56 | 37 | 22.70 | 15 | 9.20 | 153 | 93.87 | 10 | 6.13 |
| 61 மூதூர் | 15 | 3 | 20.00 | 1 | 6.67 | 6 | 40.00 | 2 | 13.33 | 12 | 80.00 | 3 | 20.00 |
| 62. கந்தளாய் | 5 | 4 | 80.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 80.00 | 1 | 20.00 |
| 63. கின்னியா | 23 | 8 | 34.78 | 5 | 21.74 | 5 | 21.74 | 4 | 17.39 | 22 | 95.65 | 1 | 4.35 |
| 64. குருநாகல் | 157 | 88 | 56.05 | 26 | 16.56 | 24 | 15.29 | 12 | 7.64 | 150 | 95.54 | 7 | 4.46 |
| 65. குளியாப்பிட்டிய | 289 | 145 | 50.17 | 45 | 15.57 | 53 | 18.34 | 38 | 13.15 | 281 | 97.23 | 8 | 2.77 |
| 66 நிக்கவெரட்டிய | 32 | 10 | 31.25 | 11 | 34.38 | 3 | 9.38 | 6 | 18.75 | 30 | 93.75 | 2 | 6.25 |
| 67. மாகோ | 16 | 3 | 18.75 | 3 | 18.75 | 4 | 25.00 | 3 | 18.75 | 13 | 81.25 | 3 | 18.75 |
| 68. கிரியுள்ள | 87 | 43 | 49.43 | 17 | 19.54 | 10 | 11.49 | 14 | 16.09 | 84 | 96.55 | 3 | 3.45 |
| 69. இப்பாகமுவ | 2 | 0 | 0.00 | 1 | 50.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 |
| 70. புத்தளம் | 732 | 295 | 40.30 | 139 | 18.99 | 150 | 20.49 | 112 | 15.30 | 696 | 95.08 | 36 | 4.92 |
| 71. சிலாபம் | 2415 | 1215 | 50.31 | 394 | 16.31 | 382 | 15.82 | 309 | 12.80 | 2300 | 95.24 | 115 | 4.76 |
| 72. அனுராதபுரம் | 37 | 20 | 54.05 | 6 | 16.22 | 7 | 18.92 | 1 | 2.70 | 34 | 91.89 | 3 | 8.11 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 73. தபுத்தேகம | 13 | 6 | 46.15 | 3 | 23.08 | 2 | 15.38 | 2 | 15.38 | 13 | 100.00 | 0 | 0.00 |
| 74. கெக்கிராவ | 26 | 11 | 42.31 | 4 | 15.38 | 8 | 30.77 | 2 | 7.69 | 25 | 96.15 | 1 | 3.85 |
| 75. கலென்பின்துனுவெவ | 5 | 2 | 40.00 | 3 | 60.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 5 | 100.00 | 0 | 0.00 |
| 76. கெபித்திகொல்லாவ | 11 | 2 | 18.18 | 1 | 9.09 | 3 | 27.27 | 4 | 36.36 | 10 | 90.91 | 1 | 9.09 |
| 77. பொலன்னறுவ | 21 | 14 | 66.67 | 2 | 9.52 | 3 | 14.29 | 2 | 9.52 | 21 | 100.00 | 0 | 0.00 |
| 78. ஹிங்குரக் கொடை | 15 | 11 | 73.33 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 6.67 | 12 | 80.00 | 3 | 20.00 |
| 79. திம்புலாகல | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 80. பதுளை | 43 | 15 | 34.88 | 5 | 11.63 | 13 | 30.23 | 4 | 9.30 | 37 | 86.05 | 6 | 13.95 |
| 81. பண்டாரவளை | 98 | 38 | 38.78 | 16 | 16.33 | 24 | 24.49 | 14 | 14.29 | 92 | 93.88 | 6 | 6.12 |
| 82. மஹியங்கனை | 4 | 1 | 25.00 | 0 | 0.00 | 1 | 25.00 | 2 | 50.00 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 83. வெலிமடை | 8 | 1 | 12.50 | 0 | 0.00 | 4 | 50.00 | 3 | 37.50 | 8 | 100.00 | 0 | 0.00 |
| 84. பசறை | 40 | 11 | 27.50 | 8 | 20.00 | 9 | 22.50 | 9 | 22.50 | 37 | 92.50 | 3 | 7.50 |
| 85. மொனராகலை | 6 | 1 | 16.67 | 1 | 16.67 | 1 | 16.67 | 3 | 50.00 | 6 | 100.00 | 0 | 0.00 |
| 86. வெல்லவாய | 3 | 1 | 33.33 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 87. பிபிலை | 5 | 3 | 60.00 | 1 | 20.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 80.00 | 1 | 20.00 |
| 88. இரத்தினபுரி | 44 | 14 | 31.82 | 9 | 20.45 | 12 | 27.27 | 9 | 20.45 | 44 | 100.00 | 0 | 0.00 |
| 89. பலாங்கொடை | 38 | 16 | 42.11 | 6 | 15.79 | 9 | 23.68 | 5 | 13.16 | 36 | 94.74 | 2 | 5.26 |
| 90. நிவித்திகல | 10 | 0 | 0.00 | 3 | 30.00 | 2 | 20.00 | 4 | 40.00 | 9 | 90.00 | 1 | 10.00 |
| 91. எம்பிலிபிடிய | 22 | 12 | 54.55 | 6 | 27.27 | 2 | 9.09 | 0 | 0.00 | 20 | 90.91 | 2 | 9.09 |
| 92. கேகாலை | 37 | 24 | 64.86 | 3 | 8.11 | 5 | 13.51 | 2 | 5.41 | 34 | 91.89 | 3 | 8.11 |
| 93. மாவனல்லை | 13 | 4 | 30.77 | 4 | 30.77 | 2 | 15.38 | 3 | 23.08 | 13 | 100.00 | 0 | 0.00 |
| 94. தெஹிஓவிட்ட | 50 | 15 | 30.00 | 6 | 12.00 | 9 | 18.00 | 13 | 26.00 | 43 | 86.00 | 7 | 14.00 |
| மொத்தம் | 17892 | 8564 | 47.86 | 2735 | 15.29 | 3275 | 18.30 | 2278 | 12.73 | 16852 | 94.18 | 1040 | 5.81 |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1476 | 7.15 | 20640 | 100.00 |
| 81 - 90 | 4084 | 19.79 | 19164 | 92.85 |
| 71 - 80 | 4027 | 19.51 | 15080 | 73.06 |
| 61 - 70 | 3510 | 17.01 | 11053 | 53.55 |
| 51 - 60 | 2970 | 14.39 | 7543 | 36.55 |
| 41 - 50 | 2050 | 9.93 | 4573 | 22.16 |
| 31 - 40 | 1434 | 6.95 | 2523 | 12.22 |
| 21 - 30 | 680 | 3.29 | 1089 | 5.28 |
| 11 - 20 | 342 | 1.66 | 409 | 1.98 |
| 01 - 10 | 66 | 0.32 | 67 | 0.32 |
| 00 - 00 | 1 | 0 | 1 | 0.00 |


அட்டவணை 5

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : புள்ளிகளின் வீச்சினைக் கொள்ளும்போது, இப்பாடத்தில் 71-80 இற்கும் இடையிலான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 4027 ஆகும். அதன் சதவீதம் 19.51% ஆகும். 40 புள்ளிகளுக்கு குறைவான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 2523 ஆகும். அதன் சதவீதம் 12.22% ஆகும்.

## 1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு





**வரைபு** 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - மேலே உள்ள வரைபின்படி நான்காம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 25 %ஆகும். 27ஆம் வினாவுக்குச் சரியான விடை அளித்தோர் 93% த்தினர் மட்டுமே ஆகும். இதற்கேற்ப கடின வினாவாக 4 ஆம் வினாவைக் கருதலாம்.

## 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.





இது RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 2ம் வினாவை 67% மான மாணவர்களும், 73% மானோர் 3ம் வினாவையும் தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

## 1.3. 3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு வரைபு 3 தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -

1ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளி வீச்சு 00-25% இற்கிடையில் (0-5புள்ளிகள்) 14% த்தினரும், புள்ளி வீச்சு 26-50% இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 24% த்தினரும், புள்ளி வீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 33% த்தினரும், புள்ளி வீச்சு 76-100% இற்கிடையில் (16-20 புள்ளிகள்) 29%த்தினரும் பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

### 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




வரைபு 4

இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- 2ம் வினா 3 பகுதிகளைக் கொண்டுள்ளது. வினா இல 2-1, 2-11 ஆகியவற்றுக்கு சரியான விடையளித்தோர் 76% ஆகவும் வினா 2-111 ற்கு சரியான விடையளித்தோர் 88% ஆகவும் காணப்படுகின்றது.

# பகுதி II

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

## 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

- நேரம் :- 1 மணித்தியாலம்,                    மொத்தம் 40 புள்ளிகள்
- 40 வினாக்கள் (பல் தேர்வு வினாக்கள்)
- சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- வினா இல 1 தொடக்கம் 40 வரையான வினாக்களில் (1),(2),(3),(4) விடைகளில் சரியானது அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

2.1.2. வினாப்பத்திரம் I

1. "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன." என்பதன் கருத்து
   (1) கடவுளின் ஆசீருடனும் விருப்பத்தின்படியும் உலகம் உருவாக்கப்பட்டது என்பது
   (2) கடவுள் படைத்த உலகம் மிகவும் பெறுமதி வாய்ந்த செல்வம் என்பது
   (3) உலகை வளங்களால் நிரப்பி அதனை ஆசீர்வதித்தார் என்பது
   (4) கடவுள் தமது விருப்பத்திற்கு அமைய எல்லாப் படைப்புகளும் உருவாகச் செய்தார் என்பது

2. தொடக்க நூலில் குறிப்பிடப்படும் வானவில்லின் அடையாளத்திற்குப் பின்னணியாக அமைவது இறைவன் ..................... உடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையாகும். வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
   (1) ஆபிரகாம் (2) நோவா (3) மோசே (4) யாக்கோபு

3. இயேசுவின் பிறப்பு நமக்கு ஒரு நற்செய்தியாக அமைவது அவர்
   (1) இறைவனிடமாக இருந்து வருபவர் என்பதால்
   (2) பழைய உடன்படிக்கையின் இறைவாக்குகளை நிறைவு செய்வது பற்றியதாகும்.
   (3) உலகிற்கு விடுதலையை உருவாக்கியதால்
   (4) தாவீதின் தலைமுறையிலிருந்து வருபவர் என்பதால்

4. இயேசுவின் தோற்றம் மாறியபோது மோசேயுடனும் எலியாவுடனும் நடந்த உரையாடலின் பிரதான தலைப்பு
   (1) பத்துக்கட்டளைகளைச் சரியாகப் பின்பற்றுவது பற்றியதாகும்.
   (2) முன்னைய இறைவாக்கினர்கள் கூறிய இறைவாக்குகளை நிறைவு செய்வது பற்றியாகும்.
   (3) இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றியதாகும்.
   (4) இயேசு யெருசலேமில் நிறைவேற்ற இருந்த வாழ்க்கைப் பலியைப் பற்றியதாகும்.

5. வார்த்தையானவர் மனுவுடல் எடுத்து நம்மிடையே குடிகொண்டார். கிறிஸ்தவ ஒன்றியக் குழுவின் கலந்துரையாடலில், முதியவர் ஒருவர் மேற்குறிப்பிட்ட நற்செய்திப் பகுதிக்குக் கொடுத்த விளக்கம் பின்வருமாறு அவற்றில் மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுவது,
   (1) கிறிஸ்துவில் இறைவன் மனுவுரு எடுத்தமை.
   (2) இறைவார்த்தை மனித உள்ளங்களில் நுழைந்தமை.
   (3) இறைவார்த்தையை எப்போதும் வாசிக்கத் தூண்டப்படுதல்.
   (4) இறைவார்த்தையினூடே உண்மைக்குச் சான்று பகருதல்.

5. "மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் ....................." வெற்றிடத்திற்குப் பொருத்தமாக அமைவது,
   (1) மறையைப் போதிக்க வந்தார். (2) தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.
   (3) இறை அரசைப் பரப்ப வந்தார். (4) இறை அன்பினைக் காண்பிக்க வந்தார்.

7. படைப்பின் ஊடாக இறைவனின் மகிமையைக் காணும் நாம் .............. வழியாக இறைவனைச் சந்திக்கிறோம். வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
   (1) புதுமைகள் (2) அடையாளங்கள் (3) செபத்தின் (4) சட்டங்கள்

8. பாடசாலையில் கற்கும் உம்மிடம் விஞ்ஞானம் பற்றி இருக்க வேண்டிய பார்வை என்ன ?
   (1) பரந்த உலகத்திற்குள் நுழையும் வாயிலொன்றாக
   (2) மனித வாழ்வை இன்பமடையச் செய்வதொன்றாக
   (3) மனித முயற்சியின் வெற்றியொன்றாக
   (4) மனிதன் பெற்றுள்ள ஞானத்தின் வெளிப்பாடொன்றாக

9. கிறிஸ்தவன் தனது பாவங்களைக் குருவானவரிடம் வெளிப்படுத்துவது
   (1) இறைவனுக்கும் சமூகத்திற்கும் எதிராகப் பாவம் செய்வதால் ஆகும்.
   (2) பகிரங்கமாக ஒருவரிடத்தில் பாவங்களைக் கூறுவது வெட்கத்திற்கு இடமாக இருப்பதால் ஆகும்.
   (3) தனது பாவங்களை இன்னுமொருவரிடத்தில் வெளிப்படுத்துவதில் உள்ள பயத்தினால் ஆகும்.
   (4) தனது வாழ்வில் தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகும்.

10. செபத்தினாலும் தவச்செயல்கள் மூலமாகவும் உலகில் பாவசக்திகளைத் தோற்கடிக்க 'மரியாயின் மாசற்ற இருதய சேனை' என்ற அமைப்பை நிறுவியவர் யார் ?
   (1) திருத்தந்தை XII ஆம் பத்திநாதர். (2) மக்ஸிமிலியன் கோள்பே அடிகளார்.
   (3) திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பர். (4) அன்னை தெரேசா

11. குருத்துவ நிலைகள் மூன்றும் ஆவன
   (1) அரச - குருத்துவ - இறைவாக்குப்பணி (2) இல்லற - துறவற - குருத்துவம்
   (3) ஆயர் - குரு - திருத்தொண்டர் (4) ஆயர் - கருதினால் - திருத்தந்தை

12. இந்நாட்டில் ஒல்லாந்தர் ஆட்சிக்குள் இருந்த பகுதிகளில் கல்வியைப் பற்றி எடுக்கப்பட்ட தீர்மானம் யாதெனில்
   (1) ஒல்லாந்த மொழியைக் கட்டாய பாடமாக்குதல்
   (2) மறைப் பாடசாலைகளை முன்னேற்றுதல்
   (3) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளை ஆரம்பித்தல்
   (4) கத்தோலிக் திருமறையைக் கற்பித்தலைத் தடைசெய்தல்

13. துறவற வார்த்தைப்பாடுகளாக அமைவன
   (1) ஏழ்மை - கற்பு - கீழ்ப்படிதல்
   (2) ஏழ்மை - கீழ்ப்படிதல் - தாழ்மை
   (3) விரதத்துவம் - கீழ்ப்படிதல் - வீரம்
   (4) வீரம் - கீழ்ப்படிதல் - தாழ்மை

14. எம்மாவுஸ் ஊருக்கு சென்ற திருத்தூதர்கள் இருவரும் அன்றே மீண்டும் திரும்பி யெருசலேமுக்குப் புறப்பட்டது.
   (1) யேசுவின் உடலைக் கல்லறையில் காணவில்லை என்ற செய்தி அறிய வந்ததால்
   (2) யேசு மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தார் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்ததால்
   (3) ஏனைய திருத்தூதர்கள் அவர்களுடைய வருகையை எதிர்பார்த்திருந்ததால்
   (4) உயிர்த்த யேசுவை அவர்கள் கண்டதாக ஏனைய திருத்தூதர்களுக்கு அறிவிக்க

15. பிறவிக் குருடனாக இருந்த ஒருவரைக் குணமாக்கிய புதுமையின் மூலம் விளங்குவது
   (1) மக்கள் மீதுள்ள இறைவனின் எல்லையற்ற இரக்கமுள்ள அன்பு
   (2) படைப்பைப் [illegible] படைத்தவரால் முடியும் என்பது
   (3) இறைமகன் யூத மக்கள் மத்தியில் தனது புகழ [illegible] வச் செய்தார் என்பது
   (4) மனிதனிடத்தில் விசுவாசத்தை வளர்க்க இறைவனால் முடியும் என்பது

16. திருச்சபையின் ஆரம்ப நாளாக கணிக்கப்படுவது
   (1) விண்ணேற்றமடைந்த நாளாகும்.
   (2) பெந்தகோஸ்தே நாளாகும்.
   (3) பாஸ்கா விழாவாகும்.
   (4) வெற்றி ஆர்ப்பரிப்போடு யெருசலேமுக்கு நுழைந்த நாளாகும்.

17. யாக்கோப்பின் நடத்தை காரணமாக ஏசாய்க்கு விளைந்த அநீதியாவது
   (1) வழிமுறையில் வரும் தலைமைத்துவத்தை இழந்தமை.
   (2) தனது சகோதரனை இழந்தமை.
   (3) தனது தந்தையின் ஆசீரை இழந்தமை.
   (4) தான் வாழ்ந்த பகுதியிலிருந்து ஓடிச் செல்ல நேர்ந்தமை

18. "தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்." எனத் தூயபவுல் கூறும் இவ் அறிவுரை எழுதப்பட்டுள்ள திருமுகம் ஆவது
   (1) கலாத்தியர்
   (2) உரோமையர்
   (3) II கொரிந்தியர்
   (4) I கொரிந்தியர்

19. "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது ?" இவ்வாறு இயேசு கூறியது
   (1) நிக்கோதேமுவிற்கு
   (2) பேதுருவிற்கு
   (3) சக்கேயுவிற்கு
   (4) தோமாவிற்கு

20. அஜித் தனது தகப்பனுக்கு நோயில் பூசுதல் என்னும் அருளடையாளத்தை வழங்கப் பங்குத் தந்தையை அழைத்து வந்தது
   (1) பரிசுத்த தைலத்தைத் தந்தைக்குப் பூசுவதற்காக
   (2) தனது தகப்பனுக்கு ஆன்ம, உடல், உள நலத்தைப் பெற்றுக் கொடுக்கும் எதிர்பார்ப்பில்
   (3) தனது குடும்ப உறுப்பினர்களைத் தேற்றுவதற்காக
   (4) ஏனைய அருளடையாளங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால்.

21. யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இதனை நாம் குறிப்பிடும் ஒரு சொல்,
   (1) மனுவுருவாதல்
   (2) இறைவெளிப்பாடு
   (3) பாஸ்கா மறைபொருள்
   (4) மறைபோதகப் பணியின் நிறைவு

22. காயின் ஆபேலைக் கொன்றதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   (1) காயின் கொலைகாரன் என்பது
   (2) காயின் மனக்குழப்பம் அடைந்தான் என்பது
   (3) காயின் சகோதரன் மீது பொறாமை கொண்டான் என்பது
   (4) காயின் இறைவனோடும் தன் சகோதரனோடும் இருந்த உறவை முறித்தான் என்பது

23. "எனது அயலான் யார் ?" என வினவியதற்கு, இயேசு விடையாக எழுத்து உரைத்தது
   (1) நல்ல சமாரியன் உவமையாகும்.
   (2) இரக்கம் உள்ள தந்தையின் உவமையாகும்.
   (3) விதைப்பவன் உவமையாகும்.
   (4) செய்வந்தனும் ஏழையும் உவமையாகும்.

24. 'அறிவு' என்னும் கொடை விசுவாசிகளுக்கு அருளப்படுவது .................... என்னும் அருளடையாளத்தின் வழியாக. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
(1) திருமுழுக்கு (2) உறுதிப்பூசுதல் (3) திவ்விய நற்கருணை (4) குருத்துவம்

25. சீடர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் இயேசு நமக்கு எடுத்துக் காட்டுவது,
(1) கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது
(2) முதலிடம் எடுத்து செயற்பட வேண்டும் என்பது
(3) தலைவன் ஊழியனாக வேண்டும் என்பது
(4) ஏனையோரின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது

26. திருப்பலியின் பங்குகொள்ளுவதன் மூலம்,
(1) பங்குக் குடும்பத்தின் ஒன்றிப்புப் பலியில் பங்குபற்றுகிறோம்.
(2) யேசுவின் சிலுவைப் பலியில் ஒன்றிக்கின்றோம்.
(3) இறைபுகழுக்கு வழி பிறக்கிறது.
(4) இறைவார்த்தைக்குச் செவிமடுக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

27. ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் ஆட்சியாளர்களின் பொறுப்பு என்பது பற்றி தலைமைத்துவ பயிற்சிப் பாசறை ஒன்றில் இவ்வாறு கலந்துரையாடப்பட்டது,
A. தம்மிடம் சேவையைப் பெறும் பிரஜைகளுக்கு நீதியை நிறைவேற்றுதல் பரிவிரக்கம் காட்டுதல்
B. ஆட்சியிலுள்ளோர் அதி சுகபோக வாழ்விற்காக தொழிலாளர் பிரிவினரை பயன்படுத்திக் கொள்ளுதல்
C. தமது தலைமைத்துவத்தில் தமக்குள்ள கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுதல்
D. பொது அபிவிருத்திச் செயற்திட்டங்களில் உற்சாகமின்றி செயற்படுதல்
மேற்கூறிய விடயங்களில் மிகவும் சரியானது
(1) A யும் B யும் (2) A யும் C யும்
(3) B யும் C யும் (4) A, B, C, D ஆகிய எல்லாம்.

28. மேரி தனது வித்தியாலய அதிபருக்கு, ஆசிரியர்களுக்கு, மாணவ தலைவர்களுக்கு, மற்றும் சமுதாயத்தில் பெரியோர்களுக்கு மதிப்பளிப்பதையும் கீழ்ப்படிவதையும் அவளது வகுப்பில் கற்கும் அசுந்தா தனது பார்வையில் காண்பது
(1) நல்ல பெயர் வாங்க மேற்கொள்ளும் முயற்சியாக
(2) தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் விதமாக
(3) அனைவரதும் மனதைக் கவரும் ஆற்றல் உள்ளவளாக
(4) சில சில நன்மைகளை எதிர்பார்த்து செயற்படுகிறாள் என்பதாக

29. கிறிஸ்தவன் பெற்றுள்ள திருமுழுக்கு அழைப்பில் நிறைவேற்ற வேண்டிய பிரதான கடமையாவது
(1) எல்லா ஞாயிறு தினங்களிலும் திரும்பலிக்குச் செல்லுதல்
(2) வேதனை துன்பங்களை அமைதியான உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ளுதல்
(3) தனது விசுவாசத்திற்குச் சான்று பகருதல்
(4) திருச்சபையின் தலைவர்களுக்கு எப்போதும் கீழ்ப்படிதல்

30. மறை ஆசிரியை ஞாயிறுதினம் மறைப்பாடசாலையில் ஒழுக்க விழுமியங்களை உடைய கிறிஸ்தவனாக வாழ்வதற்காக 'ஏனையோரின் உடமைகளைக் களவெடுக்கக் கூடாது' எனக் கற்பித்தார். இக்கற்பித்தலுக்கேற்ப வாழப் பின்பற்ற வேண்டிய கட்டளைகள் இரண்டும் ஆவன
(1) 4 உம் 8 உம் (2) 5 உம் 10 உம் (3) 7 உம் 8 உம் (4) 7 உம் 10 உம்

31. 'செபிக்கத் தெரியாத மனிதன் வாழத் தெரியாதவன்.' இவ்வாறு கூறியவர்
(1) தூய ஜோண் கிறிஸோஸ்தம் (2) தூய பிரான்சிஸ் அசீசியார்
(3) தூய அகுஸ்தினார் (4) தூய ஆசீர்வாதப்பர்

32. கெத்சமனி தோட்டத்தில் இயேசு தமது சீடர்களுக்குக் கூறிய அறிவுரை
(1) அவரைப் பாதுகாத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கும்படி
(2) சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து இறைவனிடம் வேண்டும்படி
(3) எதிரிகள் வந்தால் ஓடிப் போகும்படி
(4) தேவதூதர் கூட்டம் ஒன்று வரும்வரை காத்திருக்கும்படி

33. யேசு அடிக்கடி இறை தந்தையிடம் செபித்தது
(1) யூத சட்டத்தைப் பின்பற்றுவதற்காக
(2) சோதனைகளுக்கு உட்படாதிருப்பதற்காக
(3) இறை சித்தத்தை அறிந்துகொள்வதற்காக
(4) செபம் பற்றிச் சீடர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக

34. இடைவிடாது செபிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் உவமை
   (1) பரிசேயனும் ஆயக்காரனும்
   (2) பத்துக் கன்னியர்
   (3) நல்ல சமாரியன்
   (4) நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும்

35. 'யேசுவின் வேண்டல்' [illegible]
   (1) சீடர்களுக்குக் கற்பித்த செபமாகும்.
   (2) சீடர்களோடு செபித்த செபமாகும்.
   (3) திருத்தூதர்களைத் தேர்ந்தெடுக்கும் முன் செபித்த செபமாகும்.
   (4) இயேசு தாமே இறைதந்தையிடம் செபித்த செபமாகும்.

36. உமது குடும்பத்தில் அனைவரும் ஒன்றுகூடி தினம் செபிப்பது எவ்வகைச் செபத்திற்குள் அடங்கும்?
   (1) குழுச் செபம்
   (2) தனிச் செபம்
   (3) பொதுச் செபம்
   (4) தியானம்

37. "நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" யேசு இதன் மூலம் எடுத்துக்காட்டுவது
   (1) இறை தந்தையின் எல்லையற்ற அன்பை
   (2) இறை தந்தை பாவிகள் மட்டில் காண்பிக்கும் அளப்பரிய இரக்கத்தை
   (3) நோயாளருக்குக் குணமளிப்பது இறைவனைச் சார்ந்தது என்பதை
   (4) நோயாளர் குணமடைய செபிக்க வேண்டும் என்பதை

38. கிறிஸ்தவர்கள் செபிப்பதன் பிரதான நோக்கம்
   (1) இறைவனிடம் தாம் விரும்பும் எதையும் பெற்றுக் கொள்ளுவதற்காகும்.
   (2) தூயவர்களாகக் காணப்படுவதற்காகும்.
   (3) இறைவனோடு உள்ள உறவை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காகும்.
   (4) நமது பாவங்களுக்காக மனம் வருந்துவதற்காகும்.

39. புகழ்ச்சியும் வேண்டுதலும் உள்ளடங்கியுள்ள செபம்.
   (1) யேசுவின் வேண்டல்
   (2) திருப்புகழ் மாலை
   (3) மூவேளைச் செபம்
   (4) கிறிஸ்து கற்பித்த செபம்

40. "இறை சாயல்" என்றால் என்ன என்பதற்கு முதியோர் ஒருவர் இவ்வாறு விளக்கம் கூறினார். அவற்றில் மிகவும் பொருத்தமான கூற்று
   (1) இறைவனின் இயல்புக்கேற்ப படைக்கப்பட்டுள்ளமை
   (2) இறைவனைப் போல் அனைத்தையும் ஆளுபவனாக இருக்கின்றமை
   (3) மனிதன் ஞானம், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் உடையவனாக என்றும் வாழும் நிலையை அடைந்திருக்கின்றமை
   (4) அனைத்திலும் திருப்தி அடைந்து வாழுகின்றமை

2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 01 | ...1... | 21 | ...3... |
| 02 | ...2... | 22 | ...4... |
| 03 | ...3... | 23 | ...1... |
| 04 | ...4... | 24 | ...2... |
| 05 | ...1... | 25 | ...3... |
| 06 | ...2... | 26 | ...2... |
| 07 | ...3... | 27 | ...2... |
| 08 | ...4... | 28 | ...2... |
| 09 | ...1... | 29 | ...3... |
| 10 | ...2... | 30 | ...4... |
| 11 | ...3... | 31 | ...1... |
| 12 | ...4... | 32 | ...2... |
| 13 | ...1... | 33 | ...3... |
| 14 | ...4... | 34 | ...4... |
| 15 | ...1... | 35 | ...4... |
| 16 | ...2... | 36 | ...1... |
| 17 | ...3... | 37 | ...2... |
| 18 | ...4... | 38 | ...3... |
| 19 | ...1... | 39 | ...4... |
| 20 | ...2... | 40 | ...3... |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40 புள்ளிகள்

## 2.1.4 **வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்**

✶ **வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

- வினா இல 1,4,18 என்பவற்றைத் தவிர ஏனையைய வினாக்களுக்கு 50% ற்கும் மேலானவர்கள் சரியான விடையளித்துள்ளனர்.

- வினாக்கள் 7,20,27 ஆகியவற்றுக்கு 90% த்திற்கு மேற்பட்டவர்கள் சரியாக விடையளித்துள்ளார்கள்.

- வினாக்கள் 2,9,21,28,32,38 ஆகியவற்றுக்கு 80% த்திற்கு மேற்பட்டவர்கள் சரியான விடை-யை அளித்துள்ளார்கள்.

- வினாக்கள் 1,4,18 ஆகிய வினாக்களுக்கு 50% த்திற்கு குறைவானவர்களே சரியான விடையை அளித்துள்ளனர்.
  முதலாம் வினாவுக்கு 45% தினரே சரியாக விடையளித்துள்ளனனர்.(வரைபு 1 இன் படி) இறைவன் உலகைப் படைத்தான் என்பது தொடர்பாக போதியளவு அறிவு அநேக பரீட்சார்த்திகளிடம் இருந்தபோதிலும் சரியான விடையைத் தெரிவு செய்வதில் 55% தினர் தவறியுள்ளனர்.

- வினா இல 4 இற்கு 25% த்தினரே சரியான விடையை அளித்துள்ளனர்.

- வினா இல 1 இற்குரிய விடைகள் 1,3,4 ஆகியன ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டிருப்பது மாணவர்களுக்கு குழப்பமாக உள்ளது.

- வினா இல 4 இற்குரிய சம்பவம் மட்டுமே மாணவர்களுக்கு தெரிந்திருப்பதால் அங்கு நடைபெற்ற உரையாடலின் தலைப்பைச் சரியாக இனங்காண்பது சாதாரணதர மாணவர்களுக்குச் சிக்கலாக உள்ளது. அதனால் சரியான விடையைக் கிரகித்து விடையளிக்க முடியவில்லை.

- வினா இல 18 பாடநூல் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆகியவற்றில் தெளிவாக இடம்பெற்றிருந்தும் மாணவர்கள் மனதில் நிலைநிறுத்துவது குறைவாக இருப்பதால் 37%த்தினரே சரியான விடையை அளித்துள்ளார்கள்.

  வினா இல 27இற்கு நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புள்ளதாகையால் 94% வீதமான மாணவர்கள் சரியான விடையை அளித்துள்ளார்கள்.

- திருவிவிலிய பாவனை மாணவர்களிடம் குறைவாக உள்ளதால் அவ்வாறான வினாக்களுக்கு 50% த்திற்கும் குறைவான மாணவர்களே சரியான விடையை அளித்துள்ளார்கள். எனவே திருவிவிலிய பாவனையை அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும்.

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

- நேரம் :- 2 மணித்தியாலங்கள்
- முதலாம் வினா கட்டாயமானது. 10 பகுதிகள் கொண்ட குறுவிடை வினாவாகும். ஒரு பகுதிக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்
- ஏனைய கட்டமைப்பு வகை வினாக்கள் 6 இல் 4 இற்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

2.2.2. **வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**வினா இலக்கம் 1**

பகுதி **A**

**1.** (i) இறைவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் **இரண்டினை** எழுதுக.

(ii) இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் சென்ற பயணத்தில் இறைவன் அவர்களுக்கு அளித்த உணவையும் புதிய உடன்படிக்கையில் இயேசு நிறுவிய உணவையும் **வெவ்வேறாகக்** குறிப்பிடுக.

(iii) இறைதந்தை, கிறிஸ்து இயேசு தமது மகன் என வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் **இரண்டு** எழுதுக.

(iv) இயேசு நோயாளரைக் குணமாக்கிய **இரு** முறைகளை எழுதுக.

(v) பெந்தக்கோஸ்தே திருவிழாவின்போது, அங்கு காணப்பட்ட தூய ஆவிக்குரிய **இரு** அடையாளங்களை எழுதுக.

(vi) புனித லூக்காஸ் நற்செய்தியில் காணப்படும் புகழ்ச்சிப் பாடல்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(vii) திருச்சபையில் காணப்படும் செபத்தின் வகைகள் **இரண்டு** தருக.

(viii) திருச்சபை திருவழிபாட்டில் அதி உன்னதமாக நடாத்தும் வழிபாடு எது ?

(ix) கத்தோலிக்க திருமணத்திற்குள்ள தடைகள் **இரண்டினை** எழுதுக.

(x) இந்நாட்டில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் மறைபோதக பணிக்காக முதன் முதலாக வருகை தந்த மறைபோதகக் குழுக்கள் **இரண்டின்** பெயர்களை எழுதுக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

2.2.3 **எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**வினா 1**

1. (i) வானத்து விண்மீன்களைப்போல் உன் இனத்தைப் பெருகச் செய்வேன்.
   (ii) உன் வழி மரபினருக்கு இந்நாட்டை உரிமையாக்குவேன்.
   (iii) நீ ஆசியாக விளங்குமாறு உன் பெயரைச் சிறப்புறச் செய்வேன்.
   (iv) உனக்கு ஆசி கூறுவோருக்கு நான் ஆசி வழங்குவேன் (தொ.நூ 12:1-3)

(ii) (i) பழைய உடன்படிக்கை - மன்னா
   (ii) புதிய உடன்படிக்கை - நற்கருணை (அப்பம், இரசம்) இயேசுவின் உடல் இரத்தம்.

(iii) (i) இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றபோது (லூக் 3:21-22)
   (ii) இயேசு தோற்றம் மாறியபோது (லூக் 9-35)

(iv) (i) பரிவு கொண்டு நோயாளரைத் தொட்டதன் மூலம்
   (ii) பௌதீகப் பொருட்களைப் பயன்படுத்தியதன் மூலம்
   (iii) அவர்களது விசுவாசத்தின் மட்டில்
   (iv) இறைவார்த்தையின் அதிகாரத்தால்

(v) (i) இரைச்சலுடனான கொடுங்காற்று
   (ii) நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் (தி.ப 2:2-3)

(vi) (i) மரியாவின் பாடல் லூக் 1:47-55
   (ii) செக்கரியாவின் பாடல் லூக் 1:68-79
   (iii) சிமியோனின் பாடல் லூக் 2:29-32

(vii) (i) வாயால் செபித்தல்
   (ii) தியானச் செபம்
   (iii) ஆழ்ந்த தியானம்

(viii) இயேசுவின் பாஸ்கா மறைபொருளை நினைவுகூரும் திருப்பலி

(ix) (i) இரத்த உறவு
(ii) குறைந்த வயது
(iii) கலப்புத் திருமணம்
(iv) ஞானப் பெற்றோரின் பிள்ளைகள்

(x) (i) பிரான்சிஸ்கள் சபையினர்
(ii) இயேசு சபையினர்
(iii) டொமினிக்கள் சபையினர்
(iv) அகுஸ்தீனார் சபையினர் **(2x10=20 புள்ளிகள்)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

இது கட்டாய வினாவாகும். 98% த்தினர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இது 10 சிறு வினாக்களைக் கொண்டது. இதற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.

29% மான மாணவர்கள் 16-20 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 34% மான மாணவர்கள் 11-15 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும், 24% மான மாணவர்கள் 6-10ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 14% மானோர் 0 -5 வரையான புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

முதலாம் வினாவில் பிரிவு ix வினாவிற்கு 35% வீதமானோர் சரியான விடையளித்துள்ளனர். (வரைபு 4 இன்படி). முதலாம் வினாவில் கொடுக்கப்பட்ட பகுதி வினாக்களுக்கு மெய்விவாகம் எனும் திருவருட்சாதனம் தொடர்பாகவும் குறிப்பாக அவற்றுக்கான தடைகள் பற்றியும் விளக்கி எழுதியிருப்பின் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும். பாடநூலிலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்டதால் மாணவர்கள் 45% க்கும் மேலானோரே சரியான விடைகளை அளித்துள்ளார்கள்.

முதலாம் வினாவின் ix பகுதிக்குரிய விடை பாடநூலில் குறிப்பிட்டிருப்பதால் மாணவர்கள் இவ்விடயம் பற்றி தெளிவாக அறிந்திருப்பது அவசியமாகும். பாடநூலை தாமாகப் படித்து விடயங்களை நினைவில் நிறுத்திக் கற்பது அவசியமாகும்.

**வினா இலக்கம் 2**

**நோக்கம் : இலங்கை மக்களுக்கு கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற்றுத் தருவதில் முன்னின்றவர்களைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்**

**2.** **(i)** *இந்நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்க வழிகாட்டிகளாயிருந்த ஒரிட்டோரியரின் சபைக் குருக்கள்* ***இருவரின்*** *பெயர்களைத் தருக.*

**(ii)** *போர்த்துக்கேய மறைபோதகப் பணி இந்நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற சாதகமாக இருந்த காரணிகள்* ***மூன்று*** *எழுதுக.*

**(iii)** *கத்தோலிக்க விசுவாசத்தைக் காத்துக்கொள்ள உமது பங்கில் உம்மால் செயற்படுத்தக்கூடிய செயல்கள்* ***ஐந்தினை 75*** *சொற்களில் விளக்குக.*

**(10 புள்ளிகள்)**

(i) முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் அடிகளார்
(ii) அருட்திரு யோசேவ் மெனசெஸ் அடிகளார்
(iii) அருட்திரு யோசேவ் றவல்லோ அடிகளார்
(iv) அருட்திரு யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
(v) அருட்திரு மனுவல் த மிரண்டா அடிகளார்
(vi) அருட்திரு மிகேல் த மெல்லோ அடிகளார்

**(இரு பெயர்களை எழுதியிருந்தால் 2 புள்ளிகள் வழங்கப்படும்)**

(ii) போர்த்துக்கேய மறைப்பணியாளர்கள் இலங்கை மக்களோடு மிகவும் ஐக்கியமாக இருந்தனர்.

- நம்நாட்டு மொழிகளைக் கற்றுப் போதித்தனர்
- மீன்பிடிக் கிராமங்களான கரையோரப் பகுதிகளில் தம்
- பணியை ஆரம்பித்தனர்.
- எல்லோரையும் சமமாக நடத்தினர்.
- எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.
- தேவாலயங்களை அமைத்து தமது சேவைகளை மக்களுக்கு வழங்கினர்.
- ஆலயங்களை அண்டி பாடசாலைகளையும் அமைத்து கல்வியறிவையும் வழங்கினர்.

**(இத்தகைய காரணிகள் மூன்று எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)**

(iii)

- பங்கில் இயங்கிவரும் பத்திச் சபைகள் மூலம் செயற்படுதல்
  உ-ம் மரியாயின் சேனை, வின்சன்ற் தே பவுல்
- பங்கில் உள்ள மக்களுடன் இணைந்து பக்தி முயற்சிகளில் ஈடுபடுதல்
  உ-ம் திருச் செபமாலை, சிலுவைப் பாதை
- அருளடையாளங்களைப் பெற்று திருப்பலியில் பக்தியோடு பங்குபற்றி நற்கருணைக் குழும வாழ்வு வாழ்தல்
- சிறுவர்களுக்கு மறைக்கல்வி கற்பிப்பதை ஊக்கப்படுத்தல்
- கத்தோலிக்க நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தல்.

**(இத்தகைய கருத்துக்கள் உள்ளடக்கி 75 சொற்களுக்கு குறைபடாமல் எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

67%மான மாணவர்கள் இவ்வினாவைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். 59%மான மாணவர்கள் 8-10ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும், 19%மான மாணவர்கள் 6-7ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 18 % மான மாணவர்கள் 3-5ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 4%மான மாணவர்கள் 0-2 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

2ம் வினாவின் i வது பகுதிக்கும் ii வது பகுதிக்கும் 76% மான புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். (iii) வது பகுதிக்கு 88% மான புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

இவ்வினா இலங்கையின் வரலாறுடன் தொடர்புபட்டிருப்பதால் உணர்வுபூர்வமாக அவற்றைச் சிந்தித்து விடையளிப்பதற்கு மாணவர்கள் ஆர்வமாக இருந்துள்ளனர்.

அதனால் மற்றைய வினாக்களை விட கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். மேலும் பங்கிலே இணைந்து செயற்படும் செயல் பற்றிய விடயத்தை மாணவர்கள் கூடுதலாக எழுதியுள்ளார்கள்.

**வினா இலக்கம் 3**

**நோக்கம் : இயேசு செபத்தின் மூலம் இறைதந்தையுடன் நெருக்கமாக இணைந்திருந்தது போல் கிறிஸ்தவ மாணவர்களும் செபத்தின் மூலம் இறைவாழ்வை வளர்த்துக் கொள்வர்.**

**3.** (i) *இயேசு தனிமையில் செபித்த சந்தர்ப்பங்கள்* ***இரண்டு*** *எழுதுக.*

(ii) *“தூய மனத்தோர் பேறுபெற்றோர். அவர்கள் கடவுளைக் காண்பர்” இதன் கருத்தினை* ***மூன்று*** *உதாரணங்கள் தந்து விளக்குக.*

(iii) *இயசே போதித்த எட்டுப் பேறுகளின் மூலம் உமது வாழ்க்கைக்கு பொருந்தும் கொள்கைகள்* ***ஐந்தினைச்*** *சுருக்கமாக விளக்குக.* (10 புள்ளிகள்)

(1) (i)
1. அதிகாலைக் கருக்கலில் இயேசு எழுந்து தனியான இடத்திற்கு சென்று செபித்தார்.
2. பகிரங்க வாழ்வை ஆரம்பிக்கும் முன்னர் பாலை நிலத்தில் 40 நாட்கள் இரவும் பகலும் உணவின்றி செபித்தார். (லூக்4:1-13)
3. புதுமைகளைச் செய்யும் முன்னர் செபித்தார்.
4. ஜெஸ்தமனித் தோட்டத்தில் பாடுகள் படுவதற்கு முன் செபித்தார்.
5. சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது செபித்தார்.

**(ஏதாவது இரண்டு சந்தர்ப்பங்கள் எழுதியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்)**

(ii)
1. தூய்மையான வாழ்க்கை மேலானது என்பதை எடுத்துக் காட்டுதல்.
2. இறை வழிபாட்டில் பங்குபற்றும்போது தூய்மையான உள்ளத்தோடும் உடலோடும் இருத்தல்.
3. இறைவனில் ஒன்றித்து அசையாத விசுவாசத்துடன் இருத்தல்
4. மாசுபட்ட உள்ளம் தீமையை வெளிப்படுத்தும்.
5. தூய உள்ளத்தோர் சாந்தமுடையவராக இருப்பர். அவர் இறைவனதும் அயலவரதும் மதிப்பிற்குரியவராவர்.
6. தூய உள்ளத்தை உருவாக்கிக் கொள்வதன் மேன்மையை இவ்வுலக மதிப்பீடுகளால் அளவிட முடியாது.

**(மூன்று உதாரணங்கள் தந்து விளக்கியிருந்தால் 3 புள்ளிகள் வழங்கவும்)**

(iii)
1. நான் தாழ்மையுடன் இறைவனின் உதவியை நாடுவேன்.
2. இயேசுவுக்காக துன்பங்களை தாங்கிக் கொள்வேன்.
3. சாந்தம் வாழ்க்கையில் மேலான ஒரு பண்பு என்பதை ஏற்றுக் கொள்வேன்.
4. அநீதியை வெறுப்பவராக இருப்பேன்.
5. சமாதானத்தை விரும்புபவராக, நாடுபவராக இருப்பேன்.
6. துன்பங்கள், வேதனைகளின்போது அவற்றிற்கு முகம் கொடுத்த விசுவாசத்தோடு அசைவுறாது இருப்பேன்.

**(இவ்வாறான விடயங்கள் ஐந்து தரப்படின் 5 புள்ளிகள் வழங்கவும்)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

72% மான மாணவர்கள் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார்கள். 52%மான மாணவர்கள் 8 - 10ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 18% மான மாணவர்கள் 6 -7 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 25% மான மாணவர்கள் 3 -5 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 6% மான மாணவர்கள் 0 - 2 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

இவ்வினாவின் முதலாவது பகுதிக்கு 87%மான மாணவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள். இப் பகுதி நேரடியாகக் கேட்கப்பட்டதால் மாணவர்களுக்கு இலகுவாக இருந்தது. ஆனால் பகுதி ii, iii ற்கு ஏறக்குறைய 70% மான மாணவர்களே சரியான பதிலை அளித்து புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

இரண்டாவது பகுதி வினா மாணவர்கள் பாடவிடயத்தில் தெளிவாக இருந்தும் வினவப்பட்ட முறையில் மயக்கமாக உள்ளதால் மாணவர்கள் பதிலளித்த வீதம் குறைவாக உள்ளது. மூன்றாவது பகுதி வினாவும் பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தும் மாணவர்களுக்கு அவ் எட்டுப்பேறுகளையும் அவற்றைத் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்த (இணைக்க) வேண்டிய முறையை தெரிந்து கொண்டிருக்கவில்லை.

**வினா இலக்கம் 4**

**நோக்கம் : இறைகட்டளைகளை அனுசரிப்பதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வின் நிலையை ஒப்புநோக்கல்**

**4.** (i) *பத்துக் கட்டளைகளில் அடங்கியுள்ள பிரதான படிப்பினைகள்* **இரண்டையும்** *எழுதுக.*

(ii) *கத்தோலிக்க திருமறையின்படி எட்டாம் கற்பனையின் மூலம் நமக்குத் தரப்படும் படிப்பினைகள்* **மூன்று** *எழுதுக.*

(iii) *பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவனாகிய நீர் பின்பற்ற வேண்டிய நற்பண்புகள்* **ஐந்து** *எழுதுக.*

(10 *புள்ளிகள்*)

(i) 1. உன் முழு இருதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூருவாயாக.

2. உன்மீது நீ உன் அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக

**(இரு படிப்பினைகளும் எழுதியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்)**

(ii) 1. எப்பொழுதும் உண்மை பேச வேண்டும்.
2. உண்மைக்கு சான்று பகர வேண்டும்
3. பொய்யான வதந்திகளைப் பரப்பாதிருத்தல்
4. பிறர் கருத்தை தமது கருத்ததாக கூறாதிருத்தல்
5. பிழையான தீர்ப்புக்களை வழங்காதிருத்தல்
6. பிறரிடம் எதையாவது பெறும்நோக்கில் அவர்களைப் பற்றி பசப்பாதிருத்தல்

**(இவ்வாறான கருத்துக்கள் மூன்று எழுதியிருப்பின் 3 புள்ளிகள் வழங்கவும்)**

(iii) விசுவாசம், தேவ அன்பு. இரக்கம், நீதி மன்னிப்பு பிறர்சினேகம், நேர்மை, நம்பிக்கை, சமத்துவம், சகோதரரரை மதித்தல்

1. இறைவனில் அன்பும் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டவர்களாக வாழ்தல்.
2. கடன் திருநாட்களில் பலிப்பூசையில் பங்குபற்றல்.
3. இறை ஆராதனைகளில் பக்தியோடு பங்குபற்றுதல்.
4. பிறர் மட்டில் அன்பும் இரக்கமும் கொண்டு வாழ்தல்
5. பிறரை மதித்து நடத்தல்
6. பெற்றோரையும் முதியோரையும் அன்புடன் பராமரித்தல்
7. துர்நடத்தைகளில் ஈடுபடாதிருத்தல்
8. பிறர் பொருட்கள் சொத்துக்களைப் பாதுகாத்தல்
9. உண்மை, நீதி, நேர்மை ஆகிய பண்புகளை எப்பொழுதும் கடைப்பிடித்தல்.

**(நற்பண்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 புள்ளிகளும் அவற்றை செயற்படுத்தும் முறைகளும் எழுதியிருப்பின் 5 புள்ளிகளும் வழங்கவும்)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

71% வீதமான மாணவர்களே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார்கள். 40% மான மாணவர்கள் 8 -10ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 22% மாணவர்கள் 6 -7 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 29% மாணவர்கள் 3 - 5 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 8% தினர் 0-2 புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

இவ்வினாவின் முதலாவது பகுதிக்கு 60% மான மாணவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள். மிக இலகுவாக இருந்தும் மாணவர்கள் 100% பதிலை அளிக்கவில்லை. இரண்டாவது பகுதிக்கு 50% மான மாணவர்கள் மட்டுமே சரியான பதிலை அளித்துள்ளார்கள். பத்துக்கட்டளைகளை மாணவர்கள் மனனம் செய்து நிலைநிறுத்திக் கற்காமையால் 50% மான மாணவர்களுக்கு பதில் அளிக்க முடியவில்லை. மூன்றாவது பகுதி வினா பத்துக்கட்டளை தொடர்பாக வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் தொடர்பாக வினவப்பட்டதால் 87% மான மாணவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள்.

மொத்தத்தில் மனனம் செய்ய வேண்டிய பகுதிகள் ஆசிரியரால் மீள வலியுறுத்தப்படின் 100% புள்ளிகளை இவ்வினாவிற்கு மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

**வினா இலக்கம் 5**

**நோக்கம் : கிறிஸ்தவ சமூகத்தில் இல்லற துறவறத்தாரிடத்தில் இருக்க வேண்டிய மனப்பாங்குகள் பற்றி மாணவர்கள் ஆராய்தல்.**

**5.** (i) *பரிசுத்த திருச்சபைக்குள் அனைத்துக் கிறிஸ்தவ விசுவாசிகளையும் இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவை ?*

(ii) *ஆன்மீக தலைவர்கள் மட்டில் பொதுநிலையினருக்குள்ள கடமைகள் **மூன்று** எழுதுக.*

(iii) *கத்தோலிக்கத் திருச்சபையில் பொதுநிலையினரின் மறைதூதுப் பணி மூலம் (பக்திச் சபைகள்) ஆற்றப்படும் சேவைகள் **ஐந்தினை** விளக்குக.*

(10 *புள்ளிகள்*)

5 (i) 1. திருநிலையினர் (குருக்கள், துறவறத்தோர்)

2. பொதுநிலையினர்

**(இரு பிரதான பிரிவுகளும் எழுதியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்)**

(ii) 1. அவர்களுக்காக செபித்தல்
2. அவர்களுக்கு மரியாதை செய்தல்
3. பங்கில் மறைபரப்பு பணிக்கு உதவுதல்.
4. திருச்சபையின் வளர்ச்சிக்கு உழைப்பால் உதவுதல்
5. திருச்சபையின் தாபரிக்கு உதவுதல்
6. இறையரசைப் பரப்புவதற்கான செயற்பாடுகளில் ஒத்துழைத்தல்
7. மறைபோதக பணியில் ஈடுபடுதல்
8. பங்கிலுள்ள பக்திச் சபைகளில் இணைந்து சேவையாற்றுதல்
9. திருவழிபாட்டு செயல்களில் உதவுதல்

**(இத்தகைய கருத்துக்கள் மூன்றும் எழுதியிருப்பின் 03 புள்ளிகள் வழங்கவும்)**

(iii)

| | | |
|---|---|---|
| மரியாயின் சேனை | : | செபித்தல்<br>நோயாளரைச் சந்தித்தல்<br>வீடுகளைத் தரிசித்தல்<br>பங்கிலிருந்து விலகியிருப்போரை மீண்டும் திருச்சபையில் இணைத்தல் |
| திரு இருதயசபை | : | திரு இருதய பக்தியை வளர்த்தல்<br>திருமணி ஆராதனை நடாத்துதல்<br>வீடுகளை திரு இருதயத்துக்கு அர்ப்பணித்தல்<br>வீடுகளை தரிசித்தல் |
| பீடப்பரிசாரகர் சபை | : | திருப்பலிக்கு உதவுதல்<br>திருவழிபாட்டு ஆராதனைகளில் உதவுதல் |
| திருப்பாலத்துவ சபை | : | பாலகர்களை இயேசுவின் வழி நடத்துதல்<br>விளையாட்டுச் செயல்கள் மூலம் இயேசுவை அனுபவித்து அறிய உதவுதல் |
| வழிபாட்டுக் குழு | : | ஞாயிறு திருப்பலிக்கான ஆயத்தங்கள் செய்தல்<br>திருவிழா வழிபாடுகளை ஒழுங்கு செய்தல்<br>மறையாசிரியர் கூட்டம் தொண்டர்களாக மறைக்கல்வியைப் போதித்தல் |
| வின்சன்ற் தே பவுல் சபை | : | ஏழைகளுக்கு பொருளுதவி செய்தல்<br>துன்புறுவோருக்கு திடமளித்தல் |

**(இவ்வாறான பங்குகளில் செயற்படும் வேறு சபைகள் அவற்றின் செயற்பாடுகள் 5 எழுதியிருப்பின் 05 புள்ளிகளும் 3-4 எழுதியிருப்பின் 03 புள்ளிகளும் 2 எழுதியிருப்பின் 02 புள்ளிகளும் 1 எழுதியிருப்பின் 01 புள்ளியும் வழங்கவும் )**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

52% த்தினர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார்கள். 54% மான மாணவர்கள் 8-10 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 18% மான மாணவர்கள் 6-7 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 22% மான மாணவர்கள் 3-5ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 7% மான மாணவர்கள் 0-2 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

ஐந்தாம் வினாவின் முதலாவது பகுதிக்கு 78% மான மாணவர்கள் சரியான விடையை அளித்துள்ளார்கள். இரண்டாவது பகுதிக்கும் 79% மானவர்களும் மூன்றாவது பகுதிக்குரிய 78%வீதமானவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள்.

52% மான மாணவர்கள் இவ்வினாவைத் தெரிவு செய்திருந்தாலும் 75% ற்கு மேற்பட்ட மாணவர்கள் சரியாகப் பதிலளித்து புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். மொத்தத்தில் வினா இலகுவானது பாடப்புத்தகத்திலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பாடநூலைத் தெளிவாக கற்றவர்களுக்கு இவ்வினாவிற்கு பதிலளிக்க முடிந்துள்ளது.

பொதுவாக மூன்று வினாக்களுக்கும் ஏறக்குறைய 80%தினா் சரியாக விடையளித்துள்ளனா். பரிசுத்த திருச்சபையினரதும் பொதுநிலையினரதும் கடமைகள் பற்றி அதிகமானோா் சரியாக விளங்கிக் கொண்டுள்ளமை தென்படுகின்றது.

**வினா இலக்கம் 6**

**நோக்கம் : இயேசு சீடர்களைத் தேர்ந்து கொள்ளும்போது பின்பற்றிய கொள்கைகள் இன்றைய மாணவர்களின் அழைத்தலைக் கட்டியெழுப்புவதற்கு எத்துணை உதவியுள்ளது என்பதை அறிவர்.**

**6.** (i) *இயேசு திருத்தூதர்கள் பன்னிருவரைத் தேர்ந்து அனுப்பும்போது அவர்களுக்குக் கொடுத்த அதிகாரங்கள் **இரண்டு** எழுதுக.*

(ii) *புனித லூக்காஸ் நற்செய்தியில் 9 : 3 – 6 இல் குறிப்பிட்டுள்ளபடி திருத்தூதர்களை தேர்ந்து அனுப்பும்போது அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள் **மூன்று** எழுதுக.*

(iii) *திருப்பலியில் பங்குபற்றுவதன் மூலம் அமைதியின் தூதனாக, கிறிஸ்துவின் படிப்பினைகளைச் சமுதாயத்தில் எவ்வாறு பரப்புவீர் என்பதனை உதாரணங்கள் **ஐந்து** முன்வைத்து விளக்குக.*

**(10 *புள்ளிகள்*)**

6 (i) 1. நோயாளரைக் குணப்படுத்தும் அதிகாரம்
2. பேய்களை அடக்கும் அதிகாரம்
3. இறையாட்சி பற்றிப் பறைசாற்றும் அதிகாரம்

**(அதிகாரங்கள் 2 எழுதியிருப்பின் 02 புள்ளிகள் வழங்கவும்)**

(ii) 1. பயணத்திற்கு கைத்தடி, பை, உணவு. பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டுபோக வேண்டாம்.
2. ஓர் அங்கி போதும்
3. நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும் அங்கேயே தங்கியிருங்கள். அங்கிருந்தே புறப்படுங்கள்.
4. உங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்.

**(அறிவுரைகள் மூன்று இரண்டு எழுதியிருப்பின் 03 புள்ளிகள் வழங்கவும்)**

(iii) 1. இறைவார்த்தைக்கு செவிமடுப்பதன் மூலம் அதை அன்றாட வாழ்வில் பின்பற்றுதல்
2. பங்கின் பொது வேலைகளுக்காக நேரத்தை செலவிட தயங்காதிருத்தல்
3. பங்கில் வாழும் ஏழை எளியவருக்கு பணத்தாலும் பொருளாலும் உதவுதல்.
4. வகுப்பில் மாணவர்கள் ஒற்றுமையின்றி இருப்பின் அவர்களை ஒன்று சேர்த்தல்
5. சமாதானத்திற்காக செபித்தல்

**(இத்தகைய 5 கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருப்பின் 03 புள்ளிகளும் விளக்கியிருப்பின் 05 புள்ளிகளும் வழங்கவும்.)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

52%மான மாணவர்கள் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார்கள். 48% மான மாணவர்கள் 8-10 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 19%தினர் 6-7 இற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 26% மான மாணவர்கள் 3-5 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 8% மான மாணவர்கள் 0-2 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

இவ்வினாவின் பகுதி i இற்கு 78% மான மாணவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள். ஆனால் இரண்டாவது பகுதிக்கு 58% மான மாணவர்கள் மட்டும் சரியான பதிலை அளித்துள்ளார்கள். மூன்றாவது பகுதிக்கு 80% மான மாணவர்கள் சரியான பதிலை அளித்துள்ளார்கள்.

இவ்வினாவை நோக்கும்போது, இதன் இரண்டாவது பகுதி லூக்கா நற்செய்தியில் 9:3-6 திருவிவிலிய வசனங்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டதால் மாணவர்களில் 58% மாணவர்களே சரியாகப் பதில் அளித்துள்ளனர். திருவிவிலியப் பகுதிகளை மனனம் செய்வதில் மாணவர்களின் உற்சாகமின்மையே காரணமாகவுள்ளது. இதனால் இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**வினா இலக்கம் 7**

**7.** *பின்வரும் தலைப்புகளில்* **இரண்டைத்** *தேர்ந்தெடுத்துச் சிறுகுறிப்பு எழுதுக.*

(i) *'மரிக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை அழியவிடமாட்டேன்'' - மரியகொறட்டி*

(ii) *முதற் கிறிஸ்தவ சபையின் வாழ்க்கை முறை*

(iii) *திருத்தொண்டரின் கடமைகளும் பொறுப்புகளும்*

(iv) *பிதாவையும் மாதாவையும் சங்கித்திரு (4 ஆம் சட்டளை)*

(v) *வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான்* **(5 × 2 = 10** *புள்ளிகள்***)**

7 (1) மரிக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை அழியவிடமாட்டேன்.
மரியகொறற்றி

தந்தையின் மரணத்தின் பின் 12 வயது நிரம்பிய மரிய கொறற்றி தாயுடன் சேர்ந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். தன் இளைய சகோதரர்களைப் பாதுகாத்துக் கொண்டு இறைவனை அன்பு செய்வது எவ்வாறென்றும் அவரிடம் செபிப்பது எவ்வாறென்றும் அவள் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாள். இவ்வாறு மரியா அழகிலும் ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கினாள். ஒருநாள் மரியா தனது வீட்டில் தனியாக இருந்த சந்தர்ப்பத்தில் ஓர் இளைஞன் தவறான எண்ணத்துடன் அவளை அணுகினான். அவளைப் பாவத்தில் வீழ்த்த நினைத்தான். மரியா அதற்கு மறுத்ததால் கோபத்திற்கு ஆளான அவ்விளைஞன் அவளைக் கத்தியால் குத்தினாள். மரியா இறக்கும் தறுவாயில் இருக்கும்போது தன் தாயை அழைத்து அம்மா நான் முதல் முறையாக தேவநற்கருணை பெற்றபோது இயேசுவுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன் என்றாள்.

**(இத்தகைய கருத்துக்கள் அடங்கலாக ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கப்படும்)**

(ii) முதற் கிறிஸ்தவ சபையின் வாழ்க்கை முறை

அவர்கள் திருத்தூதர்" கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.நிலபுலன்களும் பிற உடமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப்பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள் எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள் (தி.ப 2:42-47).

**(இத்தகைய கருத்துக்கள் அடங்கலாக ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கப்படும்)**

(iii) திருத்தொண்டரின் கடமைகளும் பொறுப்புகளும்

இறைவார்த்தையை வாசித்தலும் போதித்தலும்
திருமுழுக்கு கொடுத்தல்
நற்கருணை பகிர்ந்தளித்தல்.
ஆயருக்கும் குருக்களுக்கும் உதவுதல்
நற்கருணை ஆசீர் வழங்குதல்
நோயாளரையும் திருப்பண்டங்களையும் ஆசீர்வதித்தல்.
மக்களையும் திருப்பண்டங்களையும் ஆசீர்வதித்தல்.
மரணச் சடங்கை நிறைவேற்றுதல்.

**(இத்தகைய கருத்துக்கள் அடங்கலாக ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கப்படும்)**

(iv) பிதாவையும் மாதாவையும் சங்கித்திரு (4ம் கட்டளை)

பெற்றோரை அன்பு செய்தல் மதித்தல்
பெற்றோருக்கு கீழ்ப்படிதல்
பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றல்
பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வெற்றி பெற்றோருக்கு மகிழ்வூட்டுதல்
பெற்றோரை இழிவுபடுத்தும் வகையில் நடந்து கொள்ளாதிருத்தல்.
குடும்பத்தில் தமக்குள்ள பொறுப்பை தாமே நிறைவேற்றுதல்
பெற்றோரின் வயோதிபப் பருவத்திலும் நோயுற்ற காலங்களிலும் அவர்களைப் பராமரித்தல்

**(இத்தகைய கருத்துக்கள் அடங்கலாக ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கப்படும்)**

(v) வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான்

யூதா மலைநாட்டிலுள்ள அயீன்கரீம் என்னும் ஊரில் செக்கரியாவுக்கும் எலிசபேத்துக்கும் மகனாகப் பிறந்தவரே திருமுழுக்கு யோவான். இவர் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் நிறைவு பெற்றிருந்தார். இறைவனது வியத்தகு திட்டத்தை இவரது பிறப்பினால் அறிந்த மக்கள் அச்சமடைந்தார்கள். மெசியாவின் வழியை ஆயப்படுத்த வந்த பழைய ஏற்பாட்டின் இறுதி இறைவாக்கினர் என்பதால் பழைய புதிய உடன்படிக்கையின் பாலமாக விளங்குகின்றார். அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் மனமாற்றம் பெற துணிச்சலுடன் அவர்கள் தவறை சுட்டிக் காட்டினார். பாவமன்னிப்படைய மனந்திரும்பி திருமுழுக்குப் பெறவேண்டுமென யோர்தானை அடுத்துள்ள நாடெங்கும் சுற்றி அறிவித்தார். பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் கேட்கிறது என எசாயா இறைவாக்கினனரால் அறிமுகப்படுத்தப்பட்டவரும் இவரே. பாலைவன வாழ்க்கை வாழ்ந்து தவ முனியாக இருந்து மனந்திரும்பிய அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுத்தார். பொதுமக்களுக்கும் வரிதண்டுவோர்க்கும் படைவீரருக்கும் மனமாற்றத்தின் அடையாளமாகச் செய்ய வேண்டியது என்ன என்பதை துல்லியமாக எடுத்துக் கூறி மெசியாவின் வழியை நன்கு ஆயத்தம் செய்தார்.

**(இத்தகைய கருத்துக்கள் அடங்கலாக ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கப்படும்)**

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

இது வித்தியாசமான வினாவாகும். 5 தலைப்புகளில் இரண்டைத் தேர்ந்தெடுத்து விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக அதிக பரீட்சார்த்திகள் தெரிவு செய்த வினா இதுவாகும். 75% தினர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார்கள்.

55% தினர் 8 -10ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 15% தினர் 6 - 7 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும், 25% தினர் 3-5இற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் 7%தினர் 0 - 2 ற்கு இடைப்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

(i), (iv), (v) ஆகிய பகுதிகளில் ஏறக்குறைய 80% த்ததினர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ii, iiiஆகிய பகுதிகளைத் தெரிவு செய்தவர்கள் சற்றுக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். எல்லாப் பகுதிகளும் பாடநூலில் உள்ளடக்கப்பட்டிருப்பதாலும் பாடத்திட்டத்திற்கு அமைவாக உள்ளதாலும் மாணவர்களுக்கு விடையளிப்பது இலகுவாக இருந்தது. மாணவர் வாழ்க்கைக்கு அவசியமான விடயங்களாக இருந்தால் கூடச் சிறப்பாக இருக்கும்.

## பகுதி III

# 3.0 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

✶ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.

✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.

✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

✶ எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.

✶ ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

✶ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.

✶ வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.

✶ வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

✶ இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது திரு விவிலியத்துடன் தொடர்புபடுத்தி விடையளித்தல் சிறந்தது.

✶ சிறுகுறிப்புக்களைத் தெரிவுசெய்து எழுதும்போது அவை தொடர்பாக முக்கியமான விடயங்களை மட்டும் எழுதுதல் வேண்டும்.

## 3..2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்**

- ✶ மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடநூல்களையம் ஏனைய நூல்களையும் தெளிவாக வாசிக்க வேண்டும்.
- ✶ பாட ஆசிரியர்கள் “ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மட்டும் தங்கியிருக்காது பாடம் தொடர்பாக ஏனைய நூல்களையும் வாசித்தல் அவசியம்.
- ✶ ஆசிரியரும் மாணவரும் திருவிவிலியம் வாசிப்பது கட்டாயமானது. மாணவர்கள் கத்தோலிக்கப் பத்திரிகைககள், செபப்புத்தகங்கள் வாசிப்பது அவசியமானது.
- ✶ பாடப்புத்தகத்தைக் கற்பதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழவேண்டும்.
- ✶ கிறிஸ்தவ விழுமியங்களை முதலில் தங்கள் குடும்பங்களிலிருந்து பெற்று அவற்றை பாடசாலைச் சமூகத்தில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.
- ✶ அருளடையாளங்கள், பத்துக் கட்டளைகள் இவற்றை மனனம் செய்து வைத்திருப்பதோடு மட்டுமல்லாது அவற்றை வாழக்கையில் ஆழமாக கடைப்பிடித்து வாழ்தல் வேண்டும்.
- ✶ செபவழிபாடுகளில் பங்குபற்றுவதோடு செபத்தைத் தமது வாழ்வில் கடைப்பிடித்து கருத்தரங்குகள் ஞானொடுக்கங்களிலும் பங்குபற்றி தமது ஆன்மீக வாழ்வை வளம்படுத்திக் கொள்ள வேண்டும்.